DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 89/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : **கார்த்திகைசெல்வி** ( Pw.2)
Father/Husband Name : **சுப்புராஜ்**
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day July of 2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. மேற்படி எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

**1.** நான் தற்போது திருச்சுழியில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது கம்பாளியில் குடியிருந்து வந்தேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு காலை 11 மணியளவில் நானும் எனது அம்மா அசா1 ம் எங்கள் ஊர் அருகில் உள்ள சுடுகாட்டிற்கு பக்கம் உள்ள நிலத்தில் நெல் நடவு செய்து கொண்டும் இருக்கும்போது சந்தியா, சங்கீதாவள்ளி, சித்ரா, பொன்னாத்தாள், பெரியசாமி ஆகியோர் அங்கு வந்து சந்தியாவும், சங்கீதாவும் வந்து சந்தியா என்னை கீழே போட்டு மிதித்து என்னை நெஞ்சில் ஏறி மிதித்தார். பொன்னாத்தாளும், சித்ராவும் எனது அம்மாவை அடித்தார்கள். பெரியசாமி என் அம்மா அசா1 ன் தலைமுடியை பிடித்துக்கொண்டார். அருவாள், மற்றும் கம்பு, மண்வெட்டி ஆகியவற்றால் அடிக்கவரும்போது எங்களால் ஒன்றும் செய்யமுடியாமல் நாங்கள் அங்கு இருந்து எந்திருச்சு ஓடி வந்தோம். சந்தியா கம்பால் எறிந்ததில் எனக்கு அந்த

கம்பு என் குதிங்காலில் பட்டது. சங்கீதா பெரிய கல் ஒன்றை எடுத்து எறிந்தததில் அது எனது வலது நெற்றி அருகில் பட்டதில் வீக்க காயம் ஏற்பட்டது. அதன்பிறகு நாங்கள் வீட்டில் இருந்தோம். அங்கும் வந்து அடிக்கவந்தார்கள். ஊர் பொதுமக்கள் தடுத்துவிட்டார்கள். அந்த இடத்தில் ஊராட்சிமன்ற தலைவர் வாசு இருந்தார். பின்பு இது சம்பந்தமாக எனது அம்மா அசா1 புகார் கொடுத்தார். நானும் நரிக்குடிஅரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார்என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 89/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **ராக்கு** ( Pw.1) |
| Father/Husband Name | : | **சீனிவெள்ளை** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day July of 2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. மேற்படி எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

**1.** நான் தற்போது கம்பாளியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு காலை 11 மணியளவில் நான் எனது வயல்காட்டில் நெல் நடவு செய்து கொண்டு இருக்கும்போது உடன் எனது மகள் கார்த்திகைசெல்வி இருந்தார். அப்போது சந்தியா, சங்கீதாவள்ளி, பெரியசாமி, பொன்னாத்தாள், சித்ரா ஆகியோர் அங்கு வந்து அருவாள், கம்போடு என்னையும் என் மகளையும் அடித்தார்கள். அடிக்கும்போது பெரியசாமியும், அவரது மனைவி பொன்னாத்தாளும் பிடித்துக்கொள்ள அவரது மகள் சந்தியா கையால் என்னை எனது நெஞ்சில் குத்தியும் அருகில்இருந்த எனது மகளை அனைவரும் அடித்தார்கள். அப்போது எங்களுக்கு பேச மதியில்லை.

2. நாங்கள் இருவரும் சகதிக்குள் சிக்கிவிட்டோம். அப்போது யாரும் அந்த இடத்திற்கு வரவில்லை. யாரும் விலக்கவும் இல்லை. எனக்கு நெஞ்சில் காயம்

ஏற்பட்டது. என் மகளுக்கு பல்லில் ரத்தம் வந்தது. வலது கையில் காயம் ஏற்பட்டு ரொம்ப நாட்களாக வேலை செய்யமுடியவில்லை. பின்பு அருகில் இருந்த கண்மாய் கரையில் நின்று கொண்டு என் மகன் முத்து முருகனுக்கு போன் செய்து வரவழைத்து வீட்டிற்கு சென்று கொண்டு இருக்கும்போது ஊராட்சி மன்ற தலைவர் வாசு அங்கு வந்து பாலத்தின் அருகே நின்று கொண்டு இருக்கும்போது அங்கும் வந்து எதிரிகள் எங்களை கம்பு மற்றும் கையால் அடிக்க வந்ததை அங்கு இருந்தவர்கள்தடுத்து விட்டார்கள். பின்பு நான் நரிக்குடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான்கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (அந்த புகார்மனு அதசாஆ1 ஆக குறியிடு செய்யப்படுகிறது). பின்பு திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து 2 நாட்கள் சிகிச்சை பெற்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.